இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 28-06-2023

# பாட்னாவும் வாசிங்டனும் 2

குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டு வரத் துடித்து - பொதுசிவில் சட்டத்தைக் கொண்டு வரத் துடிக்கும் பிரதமர் மோடிதான் இந்தியாவில் மதப்பாகுபாடு இல்லை என்று சொல்கிறார். மணிப்பூரில் இன்று மோதிக்கொள்ளும் இரண்டு இனக்குழுக்களும் வெவ்வேறு மதத்தைச் சார்ந்தவர்கள். இந்த மதப் பாகுபாட்டை யார் தூண்டி இருப்பார்கள் எனச் சொல்லத் தேவையில்லை!

**“நாட்டின் அரசியலமைப்புச் சட்டமே பலிபீடத்தில் வைக்கப்பட்டுள்ளது போல் உள்ளது. அதிகரித்து வரும் வெறுப்பு அரசியலுக்கு முடிவு கட்டுங்கள்” என்று பிரதமர் மோடி அவர்களுக்கு 108 பேர் கையெழுத்திட்டு அனுப்பி இருந்தார்கள். முன்னாள் நீதியரசர்கள், முன்னாள் துணை நிலை ஆளுநர்கள், முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள், முன்னாள் வெளியுறவுச் செயலாளர்கள் - இக்கடிதத்தில் கையெழுத்துப் போட்டு இருந்தார்கள். “இங்கு பலிபீடத்தில் இருப்பது சிறுபான்மையினர் மட்டுமல்ல, இந்திய அரசியலமைப்புச் சட்டமும்தான்”** என்று அவர்கள் சொல்லி இருந்தார்கள்.

வெறுப்புப் பேச்சுகளுக்கு எதிரான கடுமையான எச்சரிக்கையை கடந்த ஏப்ரல் மாதம் உச்சநீதிமன்றம் விடுத்திருந்தது. மகாராஷ்டிரா மாநிலத்தில் நடந்த 50 பொதுக்கூட்டங்களில் வெறுப்புப் பேச்சு பேசப்பட்டது குறித்து உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. டெல்லி, உ.பி., உத்தரகாண்ட் மாநிலங்களில் வெறுப்புப் பேச்சு குறித்தும் மனு தாக்கல் செய்யப்பட்டு இருந்தன. இந்த வழக்குகள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கே.எம். ஜோசப், பி.வி.நாகரத்னா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறியதாவது: -

“வெறுப்புப் பேச்சுகள் பேசாமல் ஒவ்வொருவரும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் அரசியலை மதத்துடன் கலக்கும் போது பெரிய பிரச்சினை எழுகிறது. அரசியலையும் மதத்தையும் பிரிக்கும் தருணத்தில் இது முடிவுக்கு வரும். அரசியல்வாதிகள் மதத்தை பயன்படுத்துவதை நிறுத்தினால் இதெல்லாம் நின்றுவிடும். மதத்துடன் அரசியலை கலப்பது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது என்று சமீபத்தில் தீர்ப்பில் கூறியுள்ளோம். டி.வி. மற்றும் பொது இடங்களில் கூட வெறுப்புப் பேச்சுகள் அதிகரித்துவிட்டன. நாம் எங்கு செல்கிறோம் என்று பார்க்க வேண்டும்? பேச்சுக்களில் கொஞ்சம் கட்டுப்பாடு இருக்க வேண்டாமா? இல்லையெனில் நாம் விரும்பும் இந்தியாவாக உருவாக்க முடியாது. இந்தப் பேச்சுகளால் நாம் என்ன வகையான இன்பங்களை பெறுகிறோம்” என்று நீதிபதிகள் கேட்டார்கள்.

“ தொடர்ந்து மற்றவர்களை இழிவுபடுத்தும் வகையில் ‘பாகிஸ்தானுக்கு போ’ என்று பேசி வருகின்றனர். ஆனால் பிற சமூகத்தினரும் இந்த நாட்டைத் தேர்வு செய்துள்ளனர். அவர்களும் உங்கள் சகோதர - சகோதரிகள் போன்றவர்கள். அவர்களை அவமதித்து நாட்டின் சட்டத்தை மீற உங்களுக்கு உரிமை இருக்கிறதா? நாட்டின் சட்டத்தை மீறினால், அது செங்கற்கள் போல உங்கள் தலையில் விழும். உண்மையான வளர்ச்சி என்பது நமது நாட்டை வல்லரசாக மாற்ற வேண்டும். அதற்கு நாம் சட்டத்தின் ஆட்சியை மதிக்க வேண்டும். அப்போதுதான் நம் நாட்டை சிறந்த வாழும் இடமாக மாற்ற முடியும்” என்றும் நீதிபதிகள் அப்போது சொன்னார்கள். இதுதான் வாசிங்டனில் பிரதமர் மோடி மீதான கேள்வியாக எழுந்தது. அவரால் எந்தப் பதிலையும் சொல்ல முடியவில்லை.

மாறுபட்ட இந்தியாவை வாசிங்டனில் காட்ட முயற்சித்தார் இந்தியப் பிரதமர் மோடி. உண்மையான இந்தியா எது என்பதை பாட்னா காட்டி இருக்கிறது.

*** நிதிஷ்குமார்: பா.ஜ.க. தேச நலனுக்கு எதிராகச் செயல்படுகிறது. வரலாற்றை மாற்ற முயற்சிக்கிறது.**

*** மம்தா: வரலாற்றை மாற்ற முயற்சிக்கிறது பா.ஜ.க. நாங்கள் வரலாறு பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வோம். மீண்டும் இந்த சர்வாதிகார அரசு வந்தால் எதிர்காலத்தில் தேர்தல்களே நடக்காது.**

*** டி.ராஜா: பா.ஜ.க.வின் ஒன்பது ஆண்டு கால ஆட்சியானது சட்டத்துக்கு தீங்கானதாக அமைந்துவிட்டது.**

*** மெகபூபா முக்தி: காந்தியின் இந்தியா, கோட்சேவின் இந்தியாவாக ஆக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.**

என்று இந்த தலைவர்கள் சொல்லி இருப்பதுதான் பா.ஜ.க.வின் இன்றைய இந்தியா ஆகும். இதனை மாற்றி அமைப்பதற்கான பாதையை பாட்னா வகுத்துவிட்டது.

இவர்கள் எப்படியாவது பிரிந்துவிட மாட்டார்களா என நப்பாசையில் பலரும் இருக்கிறார்கள். இந்தத் தலைவர்கள் வேறுபாடுகளை உணர்ந்து, அதனைக் களையும் எண்ணத்தோடே ஒன்று சேர்ந்துள்ளார்கள். “எங்களிடையே சில வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் விட்டுக் கொடுத்து செயல்பட முடிவெடுத்துள்ளோம்” என்பதை ராகுல் காந்தி வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறார். “ஒவ்வொரு மாநிலத்துக்கும் தனித்தனி திட்டம் வகுக்கப்படும். அதேநேரத்தில் ஒன்றிய ஆட்சியில் பா.ஜ.க.வை தூக்கி எறிய இணைந்து செயல்படுவோம்” என்கிறார் காங்கிரஸ் தலைவர் கார்கே. “நாட்டைக் காக்க நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான் இந்தக் கூட்டம் விடுக்கும் செய்தி” என்கிறார் அகிலேஷ்.

*** எந்த மாநிலத்தில் எந்தக் கட்சி செல்வாக்குடன் இருக்கிறதோ அந்தக் கட்சி தலைமையில் கூட்டணி அமைத்துக் கொள்ளலாம்.**

*** கூட்டணியாக அமைக்க முடியவில்லை என்றால் தொகுதிப் பங்கீடுகளை மட்டும் செய்து கொள்ளலாம்.**

*** அதுவும் முடியவில்லை என்றால் பொதுவேட்பாளர் அறிவித்துக் கொள்ளலாம். என்று படம் போட்டு பா.ஜ.க.வை வீழ்த்த பாட்னாவில் பாதை அமைத்துக் கொடுத்துவிட்டுத் திரும்பி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அனைத்துக்கும் முன் மாதிரியாய் இருக்கிறது தமிழ்நாடு.**

பாட்னா பாதை வெல்லும் என்பதை இந்தியா சொல்லும்!

## சென்னை பெருநகர காவல் துறை சார்பில்

# பள்ளி மாணவர்களை நல்வழிப்படுத்தும் ‘சிற்பி’ திட்ட நிறைவு விழா!

### மாணவ - மாணவிகளுக்கு சான்றிதழ்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி சிறப்பித்தார்!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.6.2023) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், சென்னை பெருநகர காவல்துறை சார்பில் நடைபெற்ற ”சிற்பி நிறைவு விழாவில், சிற்பி திட்டத்தில் பயிற்சி முடித்த மாணவ, மாணவியர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, உள்துறை முதன்மைச் செயலாளர் பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, சென்னை பெருநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூன் 28 –**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.6.2023) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், சென்னை பெருநகர காவல்துறை சார்பில் நடைபெற்ற “சிற்பி” நிறைவு விழாவில், சிற்பி திட்டத்தில் பயிற்சி முடித்த 5,000 மாணவ, மாணவியர்களிடம் கலந்துரையாடி அவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார். மேலும், முதலமைச்சர் அவர்கள் சிற்பி கீதம் என்ற சிற்பி திட்ட மாணவ, மாணவியருக்கான பாடலையும் வெளியிட்டார்.**

சென்னை பெருநகர காவல்துறை சார்பில் பள்ளி, மாணவர்கள் ஒழுக்கத்திலும் கல்வியிலும் மேலும் சிறந்து விளங்கிடவும், நாட்டுப்பற்றுடன் நல்ல பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், அவர்களை நல்வழிப்படுத்தவும், ‘சிற்பி’ (SIRPI - Students In Responsible Police Initiatives) என்ற புதிய திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.09.2022 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்தார். காவல்துறையுடன், பள்ளி மாணவர்களின் நெருக்கத்தை வளர்த்து நல்லுறவை ஏற்படுத்தி, சட்டத்தை மதிக்கும் சிறந்த குடிமக்களாகவும், காவல்துறையின் உண்மையான நண்பர்களாகவும் மாற்றும் உயரிய நோக்கில் “சிற்பி” திட்டம் தொடங்கப்பட்டது.

உன்னதமான, சிறந்த இளைய சமுதாயத்தினரை உருவாக்கிட அரசுப் பள்ளிகளை சேர்ந்த 2,558 மாணவிகள், 2,442 மாணவர்கள் என 5,000 பள்ளி மாணவ, மாணவிகளை கொண்டு சிற்பி” (SIRPI) திட்டம் உருவாக்கப்பட்டது. 12 காவல் துறை உதவி ஆய்வாளர்கள் மற்றும் ஒரு பள்ளிக்கு இரண்டு நோடல் ஆசிரியர்கள் வீதம் நியமிக்கப்பட்டு, சிற்பி திட்ட மாணவ, மாணவியருக்கு கல்வி, ஒழுக்கம், பொது அறிவு, கல்வி சுற்றுலா என பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

சிற்பி திட்டத்தின் மூலம், சிற்பி மாணவ, மாணவியருக்கு பாடத்திட்ட புத்தகங்கள், சீருடைகள் (2 எண்ணிக்கை) வழங்கப்பட்டு, 40 வாரம் பயிற்சி வகுப்புகள் மற்றும் 8 கல்விச் சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பயிற்சி வகுப்புகள் முடிக்கப்பட்டு, சிற்பி திட்டம் நிறைவு பெற்றது.

இப்பயிற்சி காலக்கட்டத்தில் சிற்பி மாணவர்களுக்கு காவல்துறை மற்றும் ஆசிரியர்கள் மூலம் கவாத்து, போக்குவரத்து விதிகள், கணினி வழிக் குற்றங்கள், குழந்தைகளுக்கான பாதுகாப்பு வழிமுறைகள், நல்லொழுக்கம், நெகிழி ஒழிப்பு, மாசு கட்டுப்பாடு, ஒளி மற்றும் ஒலி மாசு, நாட்டுப்பற்று, போதைப் பழக்கம் தடுக்கும் முறைகள், தனிப்பட்ட சுகாதாரம், இயற்கையை பேணுதல், யோகா, மனித நலம், தற்காப்பு, தேசப்பற்று, அரசு வேலைக்கு செல்லத் தேவையான படிப்புகள், குதிரைப்படை, மோப்ப நாய் பிரிவு, இயற்கை விவசாயம், நல்ல தொடுகை, தீய தொடுகை மற்றும் உதவி தொலைபேசி எண்கள் போன்ற வகுப்புகள் நிபுணர்களால் கற்பிக்கப்பட்டன.

மேலும், மாணவ, மாணவிகள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் யோகா வகுப்பில் கலந்து கொண்டு திரிகோண ஆசனம் செய்து, உலக இளம் சாதனையாளர்கள் விருது (World Young Achievers Record), தமிழ்நாடு இளம் சாதனையாளர்கள் விருது (Tamil Nadu Young Achievers Record), உலக ரெக்கார்டு யூனியன் (World Record Union) ஆகிய உலக சாதனை விருதுகளை பெற்றனர்.

இயற்கையை பேணும் விதமாக 5,000 மாணவ, மாணவிகளும் ஐந்து இலட்சம் விதைபந்துகள் தயார் செய்து வனத்துறையினரிடம் ஒப்படைத்ததுடன், 5,000 மரக்கன்றுகள் நட்டு சாதனை படைத்ததற்காக Indian Records Academy மற்றும் Asian Book of Records ஆகியஉலக சாதனை விருதுகளை பெற்றுள்ளனர்.

சிற்பி திட்டத்தை பெருமைப்படுத்தும் விதமாக, கடந்த 26.01.2023 அன்று காமராஜர் சாலையில் நடைபெற்ற குடியரசு தினவிழா அணிவகுப்பில், சிற்பி மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டு மிடுக்கான நடைபயின்று அனைவர் கவனத்தையும் ஈர்த்ததுடன், சிற்பி மாணவிகள் குழுவினர் சிறந்த படைத் தலைவருக்கான விருதையும் பெற்று பெருமை சேர்த்தனர்.

சிற்பி நிறைவு விழாவில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னைமாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திர பாபு, சென்னை பெருநகர காவல் ஆணையர் சங்கர் ஜிவால், காவல் துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கட்டணமின்றி பயில 31,445 அரசு பள்ளி மாணவ - மாணவியர் இடம் பெற்றனர்!

# பொறியியல் படிப்பிற்கான தரவரிசை பட்டியல்!

## அமைச்சர் க.பொன்முடி வெளியிட்டார்!

*சென்னை, ஜூன் 28-*

*இளங்கலை பொறியியல் படிப்பில் சேருவதற்கான தரவரிசை பட்டியலை அமைச்சர் பொன்முடி வெளியிட்டார்.*

*சென்னை, 2023 - 2024 கல்வியாண்டில் அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்படும் பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கான கலந்தாய்வுக்கு ரேங்க் (மதிப்பெண் தரவரிசை) வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியலை உயர் கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி வெளியிட்டுள்ளார்.*

*அதன் பின்னர் அமைச்சர் க.பொன்முடி கூறுகையில், இந்தாண்டு 1,87,847 ஆயிரம் பேருக்கு ரேங்க் பட்டியலிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டை விட சுமார் 18 ஆயிரம் மாணவர்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளனர்.*

*அரசுப் பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கான 7.5 இடஒதுக்கீட்டில் 31,445 மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர். இதில், 15,136 மாணவர்களும், 13,284 மாணவிகளும், இதர வகுப்பைச் சேர்ந்தவர்களும் இடம் பெற்றுள்ளனர். அவர்களுக்கு கல்லூரி கட்டணம், விடுதி கட்டணம் எதுவும் கிடையாது என தெரிவித்தார்.*

*7.5 சதவீத இடஒதுக்கீட்டில் கடந்த ஆண்டு 28,425 மாணவர்கள் தரவரிசை பட்டியலில் இடம்பெற்று இருந்தனர். இந்தாண்டு 5,842 மாணவர்கள் அதிகம் இடம் பெற்றுள்ளனர்.*

*இந்தாண்டு அரசு பள்ளியில் பயின்ற 1 லட்சத்து 6 ஆயிரம் மாணவர்கள் ரேங்க் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.*

*வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் 405 மாணவர்களும், சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தின் கீழ் பயின்றவர்கள் 20,084 மாணவர்களும் இடம் பெற்றுள்ளனர் என அமைச்சர் தெரிவித்தார்.*

*200க்கு 200 மதிப்பெண் பெற்று 102 மாணவர்கள் இடம் பெற்றுள்ளனர்.*



*இதில் 100 பேர் மாநில கல்வி பயின்றவர்கள்.*

*இந்த மதிப்பெண் தரவரிசை பட்டியலில் திருச்செந்தூரைச் சேர்ந்த நேத்ரா எனும் பெண் முதலிடமும், தர்மபுரியைச் சேர்ந்த ஹரினிகா எனும் பெண் இரண்டாமிடமும், திருச்சியைச் சேர்ந்த ரோஷினி பானு மூன்றாமிடமும் பெற்றுள்ளனர்.*

*அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களில் சைதைபேட்டையைச் சேர்ந்த மகாலட்சுமி எனும் மாணவி 200க்கு 200 மதிப்பெண் பெற்று முதலிடமும் , நாகப்பட்டினத்தைச் சேர்ந்த நிவேதிதா எனும் பெண் இரண்டாமிடமும் , கோவையைச் சேர்ந்த சரவணகுமார் எனும் மாணவர் மூன்றாமிடமும் பெற்றுள்ளனர். ஜூலை 2ந்தேதி தொடங்குவதாக இருந்த பொறியியல் படிப்பு கலந்தாய்வு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.*

*மருத்துவக் கலந்தாய்வு இன்னும் தொடங்காததால் பொறியியல் கலந்தாய்வு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இந்த பொறியியல் படிப்பிற்கான மதிப்பெண் தரவரிசை பட்டியலில் ஏதேனும் குறைகள் இருந்தால் 30.06.2023க்குள் மாணவர்கள் திருத்தம் செய்ய விண்ணப்பிக்கலாம் எனவும் மாணவர்கள் www.tneaonline.org என்ற இணையதளத்தில் தரவரிசை பட்டியலை தெரிந்துக்கொள்ளலாம் என்று அவர் கூறினார்.*



மலேசியாவில் நடைபெற்ற Asian Championship Track Cycling (Junior) போட்டியில் பங்கேற்று, இந்தியா சார்பில் முதன்முறையாக வெள்ளிப்பதக்கம் வென்ற கோவையைச் சேர்ந்த சகோதரி ஜெ.பி. தன்யதாவை விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்தினார்.